2. தகவல் கோரல்.

வேலைநிறுத்தம் செய்யும் வருவாய்த்துறை அலுவலர்களோடு பேச்சுவார்த்தை நடத்த வேண்டியது குறித்து

*திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நடைபெற்ற வருவாய்த்துறை அலுவலர்கள் சம்பந்தப்பட்ட வேலை நிறுத்தம் பற்றிய பேச்சு வார்த்தை அரசினுடைய அணுகுமுறை காரணமாக முறிவிலே முடிந்து இருக்கிறது என்பதை வேதனையோடும், வருத்தத்தோடும் இங்கே சொல்லிக்கொள்ள நான் விரும்புகிறேன். ஏற்கனவே இது இரண்டு முறை இந்த மன்றத்திலே விவாதிக்கப்பட்டது. ஆனாலும் கூட இந்த அரசினுடைய அணுகுமுறை பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைகளைத் தீர்ப்பதாக இருக்கும் ; பேச்சுவார்த்தைகளுக்கான கதவுகள் திறந்தே இருக்கிறது என்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இங்கே அடிக்கடி தெரிவித்தார்கள். ஆனால் பேச்சுவார்த்தைக்கு அவர்கள் சென்றபோது அந்தக் கதவு திறக்கப்படவில்லை; அடைத்துக் கிடந்தது என்பது தான் உண்மையாக இருந்தது. கடந்த 10 ஆம் தேதி (குறுக்கீடு) நான் முடித்த பிறகு அமைச்சர் அவர்கள் சொல்வது பொருத்தமாக இருக்கும். (குறுக்கீடு) நான் கோபப்படவில்லையே. முடித்த பிறகு சொல்லுங்கள் என்று சொல்கிறேன். பேச்சுவார்த்தைக்கு என்று அவர்கள் சென்றது கடந்த 10 ஆம் தேதி. அதற்கு முன்பாகப் பேச்சுவார்த்தை நிர்ணயிக்கப்பட்ட போது கூட ஜாக்டீ பேரமைப்பின் ஆட்சிமன்றக் குழுவைச் சார்ந்தவர்கள் 7 ஆம் தேதி அழைக்கப்பட்டார்கள். பிறகு அது 9 ஆம் தேதி என்று தெரிவிக்கப்பட்டது. அதற்குப்பிறகு 14 என்று சொல்லப்பட்டது 16 என்று மாற்றப்பட்டது மீண்டும் ஜாக்டீ வேண்டாம்; வருவாய்த் துறை அலுவலர்களே வந்தால் போதும் என்று சொல்லி 10 ஆம் தேதி வந்தார்கள். 10 ஆம் தேதி அன்றைக்குக் கூட வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு அவர்கள் வேலைக்குத் திரும்பினால்தான் மீண்டும் பேச்சுவார்த்தை என்ற நிலைமை எடுக்கக் கூடாது என்கிற அடிப்படையிலேதான் இந்த மன்றத்திலே கூட எங்கள் கட்சிக் குழுவின் தலைவர் கே. ரமணி அவர்கள் அமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்கள். 'உங்கள் அனுமதியோடு பேச்சுவார்த்தைக்குச் செல்கிறேன்; நல்ல முடிவோடு வருகிறேன்' என்று அமைச்சர் அவர்கள் அறிவித்துச் சென்றதற்கு மாறாக அன்றைய தினத்திலே அவர்களுடைய குறைந்த பட்சக் கோரிக்கை என்ன என்பதெல்லாம் கேட்டுக் குறித்துக் கொள்ளப்பட்டன. ஆனால் நேற்றைய தினம் பேச்சுவார்த்தைக்குச் சென்ற போது அரசாங்கத் தரப்பிலே இதுவரை பரிசீலித்து அறிவிக்கப்பட்டதைத் தவிர வேறு எந்தப் புதிய சலுகைகளையும் ஏற்றுக்கொள்ள முடியாது, அறிவிக்க முடியாது என்பதோடுகூட வேலை நிறுத்தத்தையும் உடனடி

[திரு. உ. ரா. வரதராசன்] [1990 ஏப்ரல் 16

10–05 மணி

யாகக் கைவிட்டு அவர்கள் உடனடியாக வேலைக்குத் திரும்ப வேண்டும்; அப்படி வேலைக்குத் திரும்பாத பட்சத்திலே மேற்கொண்டு 'நோ ஃபர்தர் டிஸ்கஷன்' எந்தப் பேச்சு வார்த்தையும் இல்லை என்று அறிவிக்கப்பட்டதோடு மட்டு மல்லாமல் அதற்கு மேலாக 16–4–1990-லேயிருந்து வேலை நிறுத்தத்தை யார் தொடர்வதாக இருந்தாலும் அவர்கள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்; அச்சுறுத்தல், வேலைக்கு வருபவர்களைத் தடுத்தல் என்ற குற்றச்சாட்டுகளைச் சொல்லி அதிலே ஈடுபடுபவர்களாக இருந்தால் சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மிரட்டக்கூடிய பாணியிலே அவர்கள் கையிலே ஓர் அறிக்கை தரப்பட்டு இருக்கிறது. இது இந்த வேலை நிறுத்தத்தைச் சுமுகமாகத் தீர்ப்பதற்குப் பதிலாக அவர்கள் எழுப்பி உள்ள கோரிக்கையை அரசு பரிவோடு கவனிக்கும் என்கிற எண்ணம் மக்கள் மத்தியிலே தூவப்பட்டு அந்த எண்ணத்துக்கு மாறான ஒரு நடைமுறை தான் பேச்சு வார்த்தையில் நடை பெற்றுக் கொண்டு இருக்கிறது. இது ஒரு தவறான தகவல் இந்த அவைக்கும், நாட்டு மக்களுக்கும் தெரிவிக்கப் பட்டு இருக்கிறது. அவர்கள் மண்டல தாசில்தார் கோரிக்கை யைப் புதிதாக எழுப்பினார்கள். அந்த புதிதான கோரிக்கையை வைத்து வேலை நிறுத்தத்தைத் தொடருகிறார்கள். மண்டல தாசில்தார் கோரிக்கையை இந்த அரசு பரிவோடு கவனிப் பதற்குத் தயாராக இருக்கிறது. ஆனால் அதற்காக வேலை நிறுத்தத்தைக் கைவிட வேண்டும். காரணம், அது ஒரு புதிய கோரிக்கை என்று சொல்லப்படுகிறது. நாங்கள்கூட கல்வி யமைச்சரைக் கேட்கிறோம், தொகுதிக்கு ஒரு புதிய கல்லூரி துவக்க வேண்டுமென்று. அவர், முடியாது, நிதிநிலை சரி யில்லை, மாவட்டத்திற்கு வேண்டுமானால் ஒன்று பரிசீலனை செய்யலாம் என்று சொல்கிறார் என்று வைத்துக்கொள் ளுங்கள். இது புதிய கோரிக்கையாக மாறிவிட முடியுமா? பிர்க்கா அளவிலே டெபுடி தாசில்தார் என்பது அவர்களுடைய கோரிக்கை. ஆனால், அரசுத் தரப்பிலேயிருந்து, மண்டல அளவிலே பரிசீலனை செய்யலாம் என்று வந்தபோது, அதை யேனும் நிர்ணயித்துக் சொல்லுங்கள் என்று சொன்னபொழுது, அவர்களாக முறித்துக் கொண்டுவிட்டார்கள் என்று சொல் வதும், அவர்கள் பிடிவாதமாக இருக்கிறார்கள் என்று சொல் வதும் பேச்சுவார்த்தையில் சுமுகமான முடிவுக்கு வர உதவக் கூடியது அல்ல. ஆகவே, நேற்றைய தினம் முறிந்திருக்கின்ற பேச்சுவார்த்தை என்பது மிகுந்த கவலையையும், வேதனையை யும் அளிப்பதாக இருக்கிறது. அதை முறிவாக ஏற்றுக்கொள் ளாமல், அரசு தன்னுடைய மிரட்டல்களையும், அச்சுறுத்தல் களையும் நீக்கிக்கொண்டு, ஒழுங்கு நடவடிக்கையிலே ஈடுபடா மல், அவர்களை மீண்டும் பேச்சுவார்த்தைக்கு உடனடியாக அழைத்து, ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய கோரிக்கைகள், ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய குறைந்தபட்சக் கோரிக்கை களை என்று அவர்கள் தந்திருப்பதை ஏற்று, இந்தப் பிரச்ச

னையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அமைச்சரவர்களும், மாண்புமிகு முதலமைச்சரவர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையென்று சொன்னால், வேலை நிறுத்தத்தைக் கைவிட்டால்தான் பேச்சுவார்த்தை என்ற நிலைமையிலே இந்த அரசு இருக்கிறது என்று சொன்னால் அது எங்களுக்கெல்லாம் வேதனையையும், ஏமாற்றத்தையும் அளிக்கிறது. கடந்த காலங்களிலே, திராவிட முன்னேற்றக் கழகம் எங்களோடு சேர்ந்து, இது போன்ற நிலையை எடுத்தவர்களையெல்லாம் கடுமையாக எதிர்த்திருக்கிறது என்பதை நினைவூட்டி, இந்த நிலைமை தொடர வேண்டாமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து இந்த மாமன்றத்தில் பல நேரங்களில் பேசப்பட்டு, நம்முடைய வருவாய்த்துறை அமைச்சரவர்களும், நானும் விளக்கங்களை அளித்திருக்கின்றோம். கடந்த இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு, மாலை நேரத்தில் இந்த மாமன்றம் கூடியபோது, நண்பர் ரமணி அவர்கள், நான் அப்பொழுது வந்திருந்ததைப் பயன்படுத்திக் கொண்டு, இந்தப் பிரச்சினையை எழுப்பினார்கள். அன்று வருவாய்த்துறை அமைச்சரவர்கள் டெல்லிக்குச் சென்றிருந்த காரணத்தால், நானே விளக்கங்களை அன்றைக்கு வழங்கினேன்.

நம்முடைய நண்பர் வரதராசன் அவர்கள் இங்கே பேசும் பொழுது அரசினுடைய அணுகுமுறை சரியில்லை என்று சொன்னார். நான் இதை விவாதத்திற்கு உள்ளாக்க விரும்பவில்லை. யாருடைய அணுகுமுறை சரியில்லை என்பது நாட்டுக்கு மிக நன்றாகத் தெரிந்துள்ள ஒன்றாகும்.

ஏற்கெனவே இருந்த அரசுகளை எதிர்த்து இப்படிப்பட்டப் போராட்டங்களில், திராவிட முன்னேற்றக் கழகம் பக்கபலமாக இருந்ததை மறந்து விடலாமா என்று கேட்டார். ஏற்கனவே, பேச்சு வார்த்தைகளுக்கே அழைக்கப்படாத ஒரு சூழ்நிலை இருந்ததையும், இன்றைக்கு இந்த அரசு பலமுறை பேச்சு வார்த்தைகளுக்கு இணக்கம் தெரிவித்து, அவர்களோடு பேசியிருப்பதையும் மறந்து விடக் கூடாது.

நான் அன்றைக்கு அறிவிக்கும்பொழுதே திட்டவட்டமாகச் சொல்லியிருக்கின்றேன். இதிலே முதலமைச்சருக்குத் தெரியாமல் வருவாய்த்துறை அமைச்சர் ஏதோ முடிவு எடுப்பதைப் போலவும், முதலமைச்சருக்குச் சரியான தகவல்கள் தரப்படவில்லை என்பதைப் போலவும் ஒரு கூற்று, பிரச்சாரம் செய்யப்படுகிறது. அதை நான் அன்றைக்கே மறுத்திருக்கிறேன். இருவரும் கலந்து பேசித்தான் இந்தப் பிரச்சினையிலே நாம் எப்படி அணுகி

தீர்த்து வைக்க வேண்டும்; ஒரு நல்ல முடிவு ஏற்படுவதற்கு எப்படி வழிகோலவேண்டும் என்று சிந்தித்துச் செயல்பட்டு வருகின்றோம்.

நான் அன்றைக்குப் பேசும்பொழுது திட்டவட்டமாகத் தெரிவித்து இருக்கின்றேன். பல கோரிக்கைகள்—வருவாய்த்துறை அலுவலர்கள் வைத்த கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக் கின்றன. அவை எவை எவை என்பது குறித்துப் பத்திரிகை யிலேயே விளம்பரம் தரப்பட்டிருக்கின்றன. ஏனென்றால், அறிக்கைகள் வாயிலாக வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டு இருப் பவர்கள் தருகின்ற விளம்பரங்களால் சில அலுவலாளர்களும் மற்றும் பொதுமக்களும் கூட குழப்பத்திற்கு ஆளாகக் கூடாது. அரசு தன்னுடைய, என்றைக்கும் உள்ள பண்பான அணுகுமுறை யோடு அவர்களை அழைத்துப் பேசி, அவர்கள் வைத்த கோரிக்கை களில் எதை எதை நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்ப தையும், எதிலே சிக்கல் உருவாகி இருக்கிறது என்பதையும் தெரிவித்து இருக்கிறோம்.

10-10 மணி

அநேகமாக, மீதம் உள்ள இரண்டு கோரிக்கைகள்தான்—ஒன்று, இந்த பர்சனல் பைல் என்பது. அதைப்பற்றி அன்றைக்கு விளக்கி இருக்கிறேன். பர்சனல் பைல் என்பது இரகசியக் குறிப் பேடு போன்றது அல்ல; அது ஒரு திறந்த புத்தகம். அது மாத்தி ரம் அல்ல. பொது மக்களுக்குப் பணியாற்றுவதற்கு நாம் மேலும் சுறுசுறுப்பாக, பொறுப்புணர்வோடு ஈடுபட வேண்டுமென்ப தற்காக உள்ள புத்தகமே தவிர, அது கான்பிடன்ஷியல் ரிக்கார்டு அல்ல—இரகசியக் குறிப்பேடு அல்ல என்பதையும், மத்திய அரசு ஏற்கனவே அறிவித்ததைப் போல, அவர்களுடைய திறமை ஆய்வு செய்யப்படுகிற அந்த நிலைமையையும் நாம் ஏற்றுக்கொள்ளாமல், அரசு ஊழியர்களுடைய சுதந்திரம் பாதிக் கப்படக் கூடாது என்பதிலே இந்த அரசு கண்ணும் கருத்துமாக இருக்கிறது என்பதையும் அன்றைக்கு நான் சுட்டிக்காட்டி இருக் கின்றேன். அப்படி இருந்தும்கூட அம்புரோஸ் குழுவினால் சொல்லப்பட்ட சில பரிந்துரைகளை ஏற்று இப்பொழுது அந்த பர்சனல் ரிஜிஸ்டரிலே இருக்கின்ற சங்கடங்களைக் கூட ஓரளவு சீர்திருத்தலாம், அதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதும் பேச்சுவார்த்தையிலே வருவாய்த்துறை அமைச்சரவர்களால் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மீதம் உள்ளது, துணைத் தாசில்தார் பதவி பிர்க்கா அளவிலா, ஜோனல் அளவிலா என்பது. ஜோனல் அளவில் டெபுடி தாசில்தார் என்று பிரச்சினை வந்ததும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், அப்படியானால், வேலை நிறுத்தத்தை கைவிடுங்கள். அதைப்பற்றிப் பிறகு பேச லாம் என்று சொல்லியிருக்கிறார். இதிலே என்ன தவறு இருக்க முடியும்?

1990 ஏப்ரல் 16] [டாக்டர் மு. கருணாநிதி]

எல்லா கோரிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பிரச்சினைக்குரியதாக இருந்த இரண்டு கோரிக்கைகளில் ஒன்றைப் பற்றி விளக்கம் அளிக்கப்பட்டு, அதிலும் சில திருத்தங்கள் செய்வதாக அரசு ஏற்றுக்கொண்டு, மீதமுள்ள பிர்க்கா அளவு டெபுடி தாசில்தார் என்பதில், ஜோனல் அளவில் டெபுடி தாசில்தார் என்று அவர்கள் சொன்ன பிறகு, அப்படியானால் வேலை நிறுத்தத்தை வாபஸ் பெறுங்கள், அதைப்பற்றிப் பிறகு பேசலாம் என்று அவரும் சொன்னார். நானும் அன்றைக்கு இந்த அவையிலே பகிரங்கமாக அறிவித்து இருக்கிறேன். ஒரு நல்ல முடிவு காணலாம், வேலை நிறுத்தத்தை திரும்பப் பெற்று, பேச்சுவார்த்தைக்கு வந்தால், அதைப்பற்றிச் சிந்தித்து ஒரு நல்ல முடிவு காணலாம், இந்த ஜோனல் அளவில் டெபுடி தாசில்தார் என்பது பற்றி என்று கூறி இருக்கிறேன். அதற்குப் பிறகும் பிடிவாதமாக இருப்பவர்கள் யார் என்பதைத்தான் எண்ணிப் பார்க்க வேண்டும். திரு. வரதராசன் பேசும்போது சொன்னார்கள். மிரட்டுகிற பாணியில் இந்த அரசு ஈடுபடுவதாக. இவைகள் எல்லாம் சில பத்திரிகைகளுக்கு தித்திப்பான செய்திகளாக இருக்கும். ''அரசு மிரட்டுகிறது—வரதராசன் அறைகூவல்'' என்று கூட பத்திரிகைகளில் போடுவார்கள். நான் அதைப் பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. இருந்தாலும் இருக்கிற நிலைமையை நான் எடுத்துச் சொல்லியாக வேண்டும்.

நீங்கள்உடனடியாக எங்களுடைய எல்லா கோரிக்கைகளையும் ஏற்காவிட்டால், மாநிலம் தழுவிய அளவில் போராட்டம் நடத்துவோம். எல்லா அரசு அலுவலர்களையும் சேர்த்துக் கொண்டு போராட்டம் நடத்துவோம் என்று சொல்வது மிரட்டலா? அல்லது நாங்கள் கடைபிடிக்கிற அணுகுமுறை மிரட்டலா என்பதை நாடு நன்றாக சிந்திக்கும் என்று நான் கருதுகிறேன். இப்போதும் சொல்கிறேன், மிரட்டுகிற பாணியோ அல்லது அணுகுமுறை தெரியாத அரசோ அல்ல இந்த அரசு. இப்போதும் சொல்கிறேன், ஒருவேளை நான் சொன்னால் அது பத்திரிகையில் வந்தால், சில பத்திரிகைகள் தவறாக கூடப் பிரசுரித்து விடுகிறார்கள், என்ன சொன்னேன் என்பதை சரியாகப் புரிந்து கொள்ளாமல். எனவே, அதை எழுதியே படிக்கிறேன். வருவாய்த் துறை அமைச்சரோடு பலமுறை பேச்சுவார்த்தை நடைபெற்று, அந்தப் பேச்சுவார்த்தையில் பல கோரிக்கைகள் இந்த அரசால் ஏற்கப்பட்டிருக்கின்றன. ஒன்றிரண்டு கோரிக்கைகளைப் பிறகு பேசி தீர்க்கலாம் என்றும், வேலை நிறுத்தத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும், அரசு விளக்கி இருக்கிறது. இப்போதும் இந்த அவையின் சார்பாக—இந்த அவையின் உறுப்பினர்கள் சார்பாக இந்த அலுவலர்களை எல்லாம் கேட்டுக் கொள்கிறேன். அரசு இப்படிப்பட்ட விஷயத்தில் கவுரவப் பிரச்சினை பார்க்கத் தயாராக இல்லை. ஒரு அமைதியான சூழ்நிலை ஏற்பட வேண்டுமென்றுதான் அரசு விரும்புகிறது. அவர்களும் நம்மவர்கள்தான். அவர்கள் வேறு யாரும் அல்ல. அவர்களும் சேர்ந்துதான் இந்த அரசை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அரசு புரிந்து கொள்ளாமல் இல்லை.

அவர்கள் கேட்டுள்ள இந்தப் பிரச்சினைகளில் உள்ள சிக்கல்களைப் பற்றிப் பிறகு பார்த்துக் கொள்ளலாம், பேசலாம். வேலை நிறுத்தத்தை வாபஸ் வாங்கிக் கொண்டு வாருங்கள், பிறகு பேசலாம். ஏனென்றால், பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்ட பிறகு, மீதம் இருக்கிற ஒன்றிரண்டு பிரச்சினைகளுக்காக வேலை நிறுத்தம் தொடரத் தேவையில்லை என்று தான் இப்போதும் சொல்கிறேன்.

*திரு. கே. ரமணி: தலைவர் அவர்களே, ஒரு கிளாரிபிகேஷன் பெற விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு சின்ன விளக்கத்தைப் பெற விரும்புகிறேன். அன்று தொழிலாளர் நல மானியத்தில் பேசும்போது, முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கும்போதுதான் எங்களுக்கு, எதிர்க்கட்சிகளுக்கு இப்படிப்பட்ட விஷயங்களில் கருத்து சொல்வதற்கு வசதியாக இருக்கும். நான் ஏதோ சாமர்த்தியமாக செய்ய வேண்டும் என்பதற்காக சொல்லவில்லை. அதுதான் எங்களுக்கு வசதி, அதுதான் நியாயம் என்ற முறையில்தான் சொன்னேன்.

இப்போதுகூட எங்களுக்கு என்ன தோன்றுகிறது என்றால், அரசுக்கும் அவர்களுக்கும் இடையே வித்தியாசம் ஒன்றும் தெரியவில்லை. சோனல் என்பதை பேசலாம் என்ற ஒரு நிலையை உறுதியாக வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், அவருடைய அதிகாரிகளும் எடுத்துவிட்டால், அவர்கள் அதை ஒப்புக்கொண்டு அவர்கள் முதலில் வைத்த கோரிக்கையிலிருந்து, இந்த கோரிக்கைக்கு மாறி, ஒப்புக்கொள்ளலாம் என்று அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். அப்படியானால் டிபரன்ஸ் எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை. ஆகவே, முதலமைச்சர் அவர்களிடம் நான் என்ன கேட்க விரும்புகிறேன் என்றால், இப்போது முதல்வர் அவர்களும் வேண்டுகோள் விடுத்து இருக்கிறார்கள். இந்த அவையின் சார்பாக. இன்றைக்கே அவர்களை நமது வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கூப்பிட்டு,—அவர்கள் மேற்கொண்டு தங்களுடைய ஒர்கிங் கமிட்டியில் எப்படி பேசுகிறார்களோ அப்படி பேசட்டும்; — பேசுவதில் என்ன தடை? நேற்றையதினம் பேச்சுவார்த்தை நடந்தபோது, இறுதியாக அவர்களிடத்தில் கையெழுத்திடாத குறிப்பு கொடுக்கப்பட்டது. நீங்கள் 16ஆம் தேதி வேலைக்கு வரவில்லை என்றால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர்களுக்குக் குறிப்பு கொடுக்கப்பட்டு இருக்கிறது. கையெழுத்தில்லாமல் ஒரு குறிப்பு கொடுக்கப்பட்டிருப்பது என்பது உண்மையாகும். அதெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். இவ்வளவுக்கும் பிறகு சுமுகமாக இதைத் தீர்ப்பதற்கு, அவர்களைக் கூப்பிட்டு பேசுவதில் பிரச்சினைகள் எதுவும் தடையாக இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அந்த ஒரு விளக்கத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொடுத்தால் இன்றைக்கே பேச்சுவார்த்தையை அவர்கள் தொடங்கலாம்.

1990 ஏப்ரல் 16]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் இவ்வளவு விளக்கமாகக் கூறிய பிறகும் மீண்டும் நம்முடைய ரமணி அவர்கள் இதிலே விளக்கம் கேட்கிறார்கள். நான் அன்றைக்கே சொல்லியிருக்கிறேன். அதைத்தான் இப்போது திரும்பவும் சொல்கிறேன். இன்றைக்கு வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டு இருக்கின்றவர்களுக்கு ஏதோ கையெழுத்திடாத ஒரு கடிதம் கொடுக்கப்பட்டதாக அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தக் கடிதத்திலே என்ன வாசகம் இருக்கிறது என்று சொன்னாரோ, அதைத்தான் இந்த அரசு இந்த அவையிலே சொல்லியிருக்கிறது. பகிரங்கமாகவே சொல்லியிருக்கிறது. ஆனால் கையெழுத்துப் போடாமல் தரவேண்டும் என்பது அல்ல; (குறுக்கீடு) — தெரியும் நான் பார்த்திருக்கிறேன் — தரவேண்டும் என்பது அல்ல. பத்திரிகை விளம்பரங்களில் கூட எது சொல்லப்பட்டதோ, அதைத்தான் இந்தக் கையெழுத்திடாத கடிதத்திலும் சொல்லப்பட்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மீண்டும் சொல்கிறேன், அவர்கள் வைத்த பத்துக்கும் மேற்பட்ட கோரிக்கைகளில் ஒன்றிரண்டைத் தவிர, எல்லாக் கோரிக்கைகளையும் இந்த அரசு ஏற்றுக் கொண்டுவிட்ட பிறகு, அந்த ஒன்றிரண்டிலே கூட மிச்சம் ஒரே ஒரு கோரிக்கை, டெபுடி தாசில்தார் பிர்க்கா அளவிலா, அல்லது ஜோனல் அளவிலா என்கிற இந்த ஒரே ஒரு பிரச்சினை, அதைப் பற்றி பிறகு அமர்ந்து பேசித் தீர்க்கலாம் அவர்கள் ஜோனல் அளவு போதும் என்ற அளவிற்குக் கூட வந்து இருக்கிறார்கள். அதைப் பற்றிப் பிறகு பேசித் தீர்க்கலாம், இன்றைக்கு வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்றுவிட்டதாக இன்று மாலையிலே செய்தி வருமானால் நாளைக்கு நானே அவர்களோடு அமர்ந்து பேசத் தயராக இருக்கிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

ஆம்பூரில் 14—4—1990 ஆம் நாளன்று நடைபெற்ற வன்முறைகள் மற்றும் துப்பாக்கிச் சூடு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எஸ். டி. உகம்சந்த், குமரி அனந்தன், எஸ். எஸ். ராமசுப்பு, கே. ரமணி, கே. ஆர். சுந்தரம், உ. ரா. வரதராசன், மற்றும் எம். அப்துல் லத்தீப் ஆகியோர் "14—4—1990 அன்று ஆம்பூர் நகரில் நடந்த நிகழ்ச்சிகளாலும், அங்கு நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டினாலும் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.